20th April 1960]

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் ஒன்று சொன்னால், அதை அவர்கள் வேறாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடி திட்டம் நிச்சயமாக இந்த அரசாங்கம் கொண்டு வரும் என்றுதான் சொன்னேன். இப்பவும் அப்படித்தான் சொல்லுகிறேன். அந்தத் திட்டத்தைக் கொண்டுவர தக்க ஏற்பாடுகள் செய்யப் படும்.

Agricultural research farms

*761—SRI A. VEDARATHNAM :
SRI V. K. KOTHANDARAMAN } கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) இந்தச் சபையில் 14-3-1960-ல் 336-ம் நெம்பர் கேள்விக்கு அளித்த பதிலை யொட்டி, இந்த மாநிலத்தில் எந்தெந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் என்னென்ன புதிய ரக விதைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அந்தப் புதிய விதைகளிலுள்ள விசேஷ அம்சங்கள் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Answer [a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : சார், இந்த விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளில் அவரவர்களுக்குத் தோன்றிய முறையிலே ஆராய்ச்சி நடத்தி விதை ரகங்களைக் கண்டுபிடிக்கிறார்களா, அல்லது அரசாங்கம் இன்னின்ன மாதிரியான விதைகள் தேவை அதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று உத்திரவு போட்டு அதன் பேரில் செய்கிறார்களா ? மானாவாரிப் பிராந்தியங்களில் மழை குறைவு, ஆகவே, அந்தக் காய்ச்சலைத் தாங்கக் கூடிய ஸ்ட்ரெயின்களை கண்டுபிடிக்க உத்திரவு உண்டா ? ரங்கூனில் வெள்ளத்தில், அல்லி, தாமரை போல், தண்ணீரில் விதைக்கும் விதைகள் இருப்பதாகவும்—அது டில்லியில் கண்காட்சியில் கூட வைக்கப்பட்டிருந்தது—அம்மாதிரி விதைகளைக் கண்டுபிடிக்க அரசாங்கம் ஆராய்ச்சியாளர்களுக்கு உத்திரவு இட்டு, ஏற்பாடு செய்வார்களா ? ஏனென்றால், இரண்டு வித ரக விதைகளுக்கும் தேவை அதிகமாக இருக்கிறது இங்கே. ஆகவே, அந்த முறையில், முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் விடையளித்தது சென்ற ஐந்தாண்டுகளில் என்னென்ன ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள், என்னென்ன ரகங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி. ஆனால், 150 ஸ்ட்ரெயின்கள் வரை நெல்லுக்கும், மில்லெட், பல்சஸ். ஆயில் ஸீட்ஸ், காட்டன் முதலியவைகளுக்கு எல்லாம் பல ஸ்ட்ரெயின்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சிப் பண்ணைகள் தங்கள் இஷ்டம் போல் செய்வதில்லை ; அதற்கு ஒரு கோ-ஆர்டினேஷன் இருக்கிறது. இதற்கெல்லாம் இந்த ஆராய்ச்சிக்கு, தலைவராக ஒருவர் இருக்கிறார். ஆராய்ச்சிப் பண்ணைகளும் ரீஜனலாக வைத்து ஒவ்வொன்றுக்கும் தொடர்பு இருக்கிறது. நெல்லுக்கு மட்டும் சொல்லுகிறேன், 72 ஸ்ட்ரெயின்கள் இருக்கின்றன. அதில் 41 ஸ்ட்ரெயின்கள் இப்பொழுது பிரயோகத்தில் இருக்கிறது. ஆனால் குறிப்பாக கனம் அங்கத்தினர் கேட்ட மானாவாரி நிலத்திற்கு ஏற்ற ஸ்ட்ரெயின் பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. ஆகவே, குறிப்பாக விடை அளிக்க முடியவில்லை.

MR. SPEAKER : இன்னும் ஐந்து நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு 9-30 a.m.
பாக்கிக் கேள்விகளையும் முடித்துவிடுகிறேன்.

[a] Printed as Appendix III on pages 434–435 infra.

[20th April 1960

SRI V. K. KOTHANDARAMAN : மேஜையின் மீது வைக்கப்பட்ட ஸ்டேட்மென்டில் நீண்டகால விவசாய விதைகள் கொடுக்கப்பட்டிருப்பதாக அதில் காணப்பட்டிருக்கிறது. ஆகையினால் குறுகிய காலத்தில் விவசாய உற்பத்தி செய்யக் கூடிய அளவில் விதைகளைக் கண்டுபிடிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீண்டகால பயிர்களைத்தான் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. நந்தன் காலத்தில் நாம் படித்தது போன்று, இரவில் நட்டு மறுநாள் காலையில் அறுவடை செய்து அறுக்கக் கூடிய அளவில் ஆராய்ச்சி இன்னும் செய்யவில்லை.

SRI A. GOVINDASAMY : திண்டிவனத்தில் இருக்கக்கூடிய மணிலா ஆராய்ச்சிப் பண்ணை டி.எம்.பி. ஆராய்ச்சியில் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதை விதைப் பண்ணையாகவும் ஆராய்ச்சிப் பண்ணையாகவும் சேர்த்து அமைக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. அதை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி தனி கேள்வி வேண்டும். சேர்த்து விதைப் பண்ணை வைக்கவேண்டிய நிலம் இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி விடை அளிக்க எனக்கு கொஞ்சம் அவகாசம் வேண்டும்.

MR. SPEAKER : As we have already exceeded the time-limit, I shall hereafter allow two supplementaries to the hon. Members who put the main questions.

Electric fans for N.G.Os.

*762 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

செக்ரடேரியேட் காரியாலயங்களில் வேலை செய்யும் என்.ஜி.ஓ.க்களுக்கும், ஜில்லா தாலுக்காக்களில் உள்ள என்.ஜி.ஓ.க்களுக்கும் மின்சார விசிறி போடுவதில் பாகுபாடு படுத்தும் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : The provision of electric fans for the Non-Gazetted Officers working in the various offices in districts and taluks is a matter of policy. Such provision will involve huge expenditure initially. Just as there is distinction in the matter of pay and allowances for the Secretariat staff and other Non-Gazetted Officers there is distinction in the matter of provision of fans and other amenities.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் கோடை காலத்தில் வெய்யில் ரொம்பக் கடுமையாக இருக்கிறது. மூன்று வருஷ காலம் மழை இல்லாத காரணத்தால் அப்படி இருக்கிறது. அவர்கள் செய்யக் கூடியது எல்லாம் மூளை உழைப்பு வேலையாக இருக்கிறது. அப்படி வேலை செய்யும்போது வெய்யில் அதிகமாக இருந்தால் வேலை செய்ய முடியாது என்பது அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகையால் உடனடியாக எந்த விதமான பாகுபாடும் இல்லாமல் எல்லா என்.ஜி.ஓ.க்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் பெரிய டாக்டராக இருப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் எந்த மாதிரியான கஷ்டங்கள் இருந்தாலும் அதைப் பற்றி அங்குள்ள மேலதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னால் அதைப் பார்த்து வேண்டிய அனுகூலம் செய்து கொடுக்கப்படும்.